# விடியல்
## The Dawn

இதழ்-113, செப்டம்பர்-2018

**கௌரவ ஆசிரியர்**
**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**
கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**
**முனைவர் சி.ரா.சுரேஷ்**
தமிழ்த்துறைத் தலைவர்

**இணையாசிரியர்**
**முனைவர் ப.பிரதீபா**
தமிழ் உதவிப்பேராசிரியர்

**ஆசிரியர் குழு**
திருமதி. சு.சாந்தி
முனைவர் கோ.இரவிச்சந்திரன்
முனைவர் ந.சங்கீதா
திரு. செ.தங்கராஜ்
முனைவர் சு.முப்பிடாதி
திரு. ந.சரவணன்
திரு ஆ.கௌரிசங்கர்
திரு. சி.கிருஷ்ணமூர்த்தி
திரு. ரா.தர்மதுரை
செல்வி. மா.சத்தியப்பிரியா
திருமதி கொ.சத்தியா
திருமதி கா.வெண்ணிலா
முனைவர் ம.சுரேஷ்
திரு க.தனபால்
திருமதி ல.வெண்ணிலா
திரு.வி.சந்திரன்


## சுதந்திர தினம்

"இன்று குழந்தைகள் நீங்கள் - எனினும்
இனிஇந்த நாட்டினை ஆளப் பிறந்தீர்"!

என்றார் பாவேந்தர் பாரதிதாசன். ஆம். இன்றைய குழந்தைகள் தான் இந்த நாட்டின் நாளைய வழிகாட்டிகள். குழந்தைகளுக்கு உள்ளேதான் ஒரு தொல்காப்பியர் இருக்கிறார். ஒரு திருவள்ளுவர் இருக்கிறார். ஒரு பேரறிஞர் அண்ணா இருக்கிறார். ஓர் அப்துல் கலாம் இருக்கிறார். ஓர் இராதாகிருஷ்ணன் இருக்கிறார். அவரைக் கண்டு தேர்ந்தெடுப்பதும், அவரை உருவாக்குவதும் ஆசிரியரின் முதன்மையான கடப்பாடாகும். ஆதனால்தான் மாணவச் செல்வங்களின் அறிவுக்கண்ணைத் திறப்பவர் ஆசிரியர் என்பார்கள்.

© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

வெளியீடு:
**தமிழ்த்துறை**
**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)**
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**
**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu




All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher

வெறுமனே நூல்களைப் பார்த்துப் படித்துப் படித்து மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பது மட்டுமே ஓர் ஆசிரியனுக்கு அழகல்ல. வாழ்க்கையை, வாழ்க்கைத் தத்துவத்தை, ஒழுக்கத்தை, கட்டுப்பாட்டை, அறிவை மாணவர்களுக்கு ஊட்டுவதே ஒரு நல்லாசிரியரின் அழகு. அதனினும் மேலாக இரண்டாம் பெற்றோராக இருந்து மாணவர்களை நல்வழிப்படுத்துவதுவதிலும் முக்கியப் பங்கு ஆசிரியர்களுக்கு உண்டு. அப்படி ஒருவர் இருந்தார். அவர்தான் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன். ஆசிரியர் பணியே அறப்பணியாகப் பணியாற்றிய இவர் அகிலம் போற்றும் தலைசிறந்த குடிமகனாகவும் விளங்கினார் என்று கூறினால் மிகையாகாது. இன்று அவரது பிறந்த தினம் அவரது விருப்பப்படியே நாடு முழுவதும் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

ஆசிரியர்களைப் பெருமைபடுத்தும் விதமாக இந்திய நாட்டின் முதல்குடிமகனாய் இருந்த பேராசிரியர் டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் 1888 செப்டம்பர் 5 – ஆம் நாள் திருத்தணி அருகே உள்ள சர்வபள்ளி என்ற கிராமத்தில் பிறந்தார். தன் திறமையால் ஆசிரியர், பேராசிரியர், பல்கலைக்கழங்களின் துணை வேந்தர் எனப் பல பரிமாணங்கள் கொண்டு திகழ்ந்தார். அத்தோடு இந்திய அரசின் தூதராகவும் பதவி வகித்தார். எழுத்தாற்றல், பேச்சாற்றல் நூல் இயற்றல் கொண்டு அனைத்து மக்களையும் தன்வசம் கொண்டு வந்தவர். இவரது சேவையினைப் பாராட்டிப் பல பல்கலைக்கழங்கள் 133 கௌரவ டாக்டர் பட்டங்கள் கொடுத்து சிறப்பளித்தன.

இத்தகு சிறப்பு மிக்க டாக்டர் இராதாகிருஷ்ணன் 1975 ஏப்ரல் 17 ஆம் நாள் மறைந்தார். அவரது சேவையினைப் பாராட்டி சென்னையில் அவர் இல்லம் அமைந்துள்ள சாலைக்கு டாக்டர்

இராதாகிருஷ்ணன் சாலை எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஆசிரியர் தினத்தின் போது ஆசிரியர்களுக்கு மாநில விருதும், தேசிய விருதும் வழங்கிச் சிறப்பளிக்கப்படுகின்றன. 1997 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு நல்லாசிரியர் விருதை "டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது" என்ற பெயரில் வழங்கி வருகிறது.

பேற்றோர்கள் குழந்தையை உலகுக்குத் தருகின்றனர். ஆனால் ஓர் ஆசிரியர் உலகத்தையே குழந்தைக்குத் தருகிறார். அதனால் தான் ஆசிரியர் பணியைப் புனிதமான தொழில் என்கிறார்கள். அறிவுப் படையை உருவாக்கும் பொறுப்பை கடமையாகக் கொண்ட ஆசிரியர்களை என்றென்றும் போற்றிப் பாராட்டுவோம். அனைவரும் போற்றி வணங்குவோம்.

-முனைவர் கோ.இரவிச்சந்திரன்
தமிழ் உதவிப் பேராசிரியர்
ஆசிரியர் குழு.



ஆசிரியர் தினம்


*கவிதைகள்………………….. ..5 - 24*

*குழந்தையின் கேள்வி……….24 -25*

*பொது அறிவு வினா- விடை…25 -27*

*தமிழ்நாடு………….………..27- 28*

*விடுகதைகள்..………………..28 - 29*

*சிரிப்புத் துளிகள்…………..30 - 31*

*கவிதைகள்…………………31 -32*

# கவிதைகள்

## அம்மா

வார்த்தைகளே இல்லாத வடிவம்
அளவுகளே இல்லாத அன்பு
சுயநலமே இல்லாத இதயம்
வெறுப்பை காட்டாத முகம் அம்மா
மறுபிறவி இருந்தால் செருப்பாக பிறக்க
வேண்டும் -என் அம்மா காலில் மிதி பட அல்ல
என்னை சுமந்த அவளை ஒரு முறை
நான் சுமப்பதற்காக
ஆயிரம் சொந்தங்கள் இருந்தாலும்
அன்னையே உன்னைப் போன்று அன்பு செய்ய
யாரும் இல்லை இவ்வுலகில்
என்றும் நானிலம் போற்றிட வாழ்க...

க.சே.அகிலன்
முதலாமாண்டு ஆங்கிலம்.

## மழைநீர் சேமிப்போம்

மழை நீர் சேமிப்போம்
அளவோடு வரும் போது
அமிர்த துளி
அளவின்றி வரும்போது
பயத்துளி !

அறவே வராத போது
வரவழைக்கும்
கண்ணீர்த் துளி!!
இதுவே
மண்ணின் உயிர்த்துளி
சித்தத்தில் உறுதிகொண்டு
சேமிப்போம் மழைத்துளி

கா.பிரீத்தி
இளங்கலை ஆங்கிலம் முதலாமாண்டு

## என் அம்மா

இவளருகில் தோள் சாயும் போது
துன்பத்தின் சுவடுகளும்
தொலைதூரம்
இவள் மடியில் துயிலுறங்கும் போது
இதயத்தில் இன்பத்தின் அருவியும்
கரைபுரண்டோடும்
ஒரு முறை உதிக்கும்
நம்மை தினம் தினம் சுமக்கும்
ஒரே ஜீவன் என் அம்மா!!!!!

சுஜித்ரா.செ
முதலாமாண்டு ஆங்கிலம்

## தண்ணீர்

தண்ணீர்
ஆனந்தத்தின் விளிம்பில் வரும்
கண்ணீரும் தண்ணீரே...

துக்கத்தின் ஆழத்தில் வரும்
கண்ணீரும் தண்ணீரே...
தாகம் என்று ஒன்றெடுக்க
நினைவிற்கு வருவீரே
தொண்டையில் சிக்கிக் கொண்டிருக்கும்
உயிரை மீட்டுத்தருவீரே
உயிர் காக்கும் தண்ணீரை
என்றும் மறவீரே
சாதத்தின் கடவுளான விவசாயிக்கு
தண்ணீர் தருவீரே
உயிர் பெறுவீரே...

ரா.ஸ்ரீசத்யா
இளங்கலை ஆங்கிலம் முதலாமாண்டு

## பூக்கள்

சலவைப் பூக்களே !
நீங்கள்
கனவின் புன்னகைகள்
காதலின் உளறல்கள்
நறுமண நட்சத்திரங்கள்
நிலவின் உச்சரிப்புகள்
காற்றில் கடிதம் எழுதும்
காதலிகள்
நீங்கள் ஒரு சாதி
வண்டுகள் ஒரு சாதி
எனவே

உங்கள் திருமணம்
கலப்புத் திருமணம்

சு.வினிதா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## அம்மா

என் விழிகளில்
அழுதிட
இதழ்களில் சிரித்திட
இமைகளில் உறங்கிட
இம்சைகளை இரசித்திட
வெற்றியில் கலந்திட
முகத்தில் மகிழ்ந்திட
பயத்தைப் போக்கிட
உயிருடன் கலந்திட
இன்பத்தைப் பெருக்கிட
இறைவனால் பரிசளிக்கப்பட்ட
இனிய தேவதை
என் தாய் !

உன்னிடம் நான் பட்ட
கடனைத் தீர்க்க
இந்த ஜென்மம் போதாது
தாயே
ஆனால் ஒன்று மட்டும்
உறுதி செய்கிறேன்

உன்னை நான் மறக்கும்
நிலையில் இந்த உலகம்
எனக்கு வைக்கும்
பெயர் பிணமாகத்தான்
இருக்கும் தாயே !

அ.பிரதீபா
இளங்கலைத்தமிழ் மூன்றாமாண்டு

## தனிமை

யார் ஆறுதல் கூறுவது?
ஏன்! இந்த தனிமை
மகிழ்வின் கனவு
சந்தேகத்துக்குள் புத்தி...
கண்களால் காண்பது
உண்மையா? இல்லை
காதால் கேட்பது உண்மையா ?
உன் வாழ்வின் இறுதி...
தனிமை என்பது
நீ உனக்காகத் தேடிக் கொண்டது...
உனக்குள் உள்ள
வலியை அறிந்து
உன் வாழ்வின்
லட்சியம் அடைவதே
இந்தத் தனிமை....

மு. உமாராணி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

# தனிமை சோதனை

கண்ணாடியாகப் பிறக்கக் கேட்டேன்
கடவுளிடம்...
என்னுள் நீ உன்னைக் காண!
என்றும் நான் உன்னைக் காண பெண்ணே!
எழுது கோளாய்ப் பிறக்கக் கேட்டேன்
கடவுளிடம்...
என் எண்ணங்களை
எழுதவல்ல உன் விரல்களுக்கு
இடையே நான் சுழல பெண்ணே!
பனித்துளியாய் பிறக்கக் கேட்டேன்
கடவுளிடம்...
காலைப் பொழுதும்
புல்வெளியில் படரவல்ல விடியல்
கோலம் போடும் உன் மேனியில் தவழ பெண்ணே!
வானவில்லாய்
சில நொடிகள் கேட்டேன்
கடவுளிடம்
வானத்தில் அரை வட்டமிட அல்ல
அரை நொடியாவது
நீ என்னை இரசிக்கப் பெண்ணே!

இரா.ஆதவன் தங்கராஜ்
இளங்கலை முதலாமாண்டு ஆங்கிலம்

## கவிதை

கவிதையே என் கவிதை கேள்!
உன்னைப் படிப்பதைப் பாடுவதா
சிந்தித்துப் பார்ப்பதா!
இல்லை உணர்வதா!

மேதைகளுக்கு நீ ஒரு கல்வி
பேதைகளுக்கு நீ ஒரு கேள்வி?

கவிஞர்களுக்கு நீ ஒரு கற்பனை
இளைஞர்களுக்கு நீ ஒரு சிந்தனை

எனக்கு நேரும் துன்பங்களின் போது
உன்னைப் படிக்கையில் வருவதோ இன்பம்.

உன்னை நினைக்க நினைக்க இனிக்கும்
உன்னைச் சுவைக்க சுவைக்க சொர்க்கம்...

ஆல்பாதி ஆடைபாதி போல
நீ பாதி நான் பாதி ஆனோமே...!

சே.ரம்யா, முதலாண்டு வணிகவியல்

## தந்தை

கருவில் சுமக்காத
மறு தாய் நீயே!

தாய் என்னைச் சுமந்தது
தன் கருவின் மீது
நீ என்னைச் சுமந்தது
உன் மாாபின் மீது
குழந்தைப் பருவத்தில்
அறிவை கொடுத்த ஆசான் நீயே...!

அன்பைக் கொடுத்த
அன்னையும் நீயே!
என் அழுகையைக் கண்டு சிரிப்பாய் நீயே!
அறிவைக் கண்டு வியப்பாய் நீயே!
அதைவிட...

என் வலியைக் கண்டு துடிப்பாய் நீயே!
அந்தத் துடிப்பில்
நான் உணர்ந்தேன்
உந்தன் அன்பை
கண்ணில் வழியும்
கண்ணீரைத் துடைத்த
உந்தன் கையில்
எனக்குக் கிடைத்தது நம்பிக்கை
தோல்வி அடைந்த போது
ஊக்கம் கொடுத்தாய்
வெற்றி அடைந்த போது
தன்னம்பிக்கை கொடுத்தாய்
அன்பு என்ற வார்த்தைக்கு
அர்த்தம் தந்தாய்

அர்த்தம் என்னும் வார்த்தைக்கே
அர்த்தமாகிவிட்டாய்
மறுபிறவி ஒன்று இருந்தால்
என்னை மார்பில் சுமந்த தந்தையே
உன்னை என் கருவில் சுமக்க ஆசைப்படுகிறேன்.

செ.ரஞ்சனி
இளங்கலைத் தமிழிலக்கியம் முதலாம் ஆண்டு.

## மழைத்துளியின் காதல்

கருநிற மேகங்கள்
தன் கூட்டத்தை அழைத்த
வேளையில்
கதிரவன் தன் பிரகாசம்
குறைந்த வேளையில்
மின்னல் கூத்தாடி
புகைப்படம் எடுத்த வேளையில்
மலைச்சாரலில் பூமி
நனைந்த வேளையில்
சில துளிகள் மட்டும்
கவிஞனின் காதில்
கூச்சலிட்டன...
அது ரோஜாப்பூ மற்றும்
மழைத்துளியின்
கொஞ்சலின் சத்தமா
இல்லை
மழைத்துளி ரோஜா இதழின்

மேல் இட்ட முத்தத்தின்

சத்தமா...

தங்கேஸ்வரி

இளங்கலைஆங்கிலம் முதலாமாண்டு

## நட்பு

வாழைக்குத் தண்டு உறவு

காய்க்கு கனி உறவு

மீனுக்குக் கடல் உறவு

மரத்திற்கு வேர் உறவு

பாரதிக்கு கவி உறவு

அது போல

என் நட்புக்கு நீ உறவு...

சு.கோகுல் குமார்

இளங்கலைஆங்கிலம் முதலாமாண்டு

## தன்னம்பிக்கை

உன் வாழ்க்கையில்

யாரும் இல்லையென்று

எப்பவும் நினைக்காதே!

உன்னோடு உன் தன்னம்பிக்கை

உள்ளது என்றும் மறந்துவிடாதே...

தங்கேஸ்வரி

இளங்கலைஆங்கிலம் முதலாமாண்டு

## நம்பிக்கை

நம்பிக்கை என்பது சிறு நூல்தான்
அதை வைத்துக் காற்றாடியை
மட்டுமல்ல
கடற் பாறையையும் பறக்க விடலாம்.

சு.கோகுல் குமார்
இளங்கலைஆங்கிலம் முதலாமாண்டு

## கவிதை மேல் ஒரு காதல்

பூக்களின் மகரந்தத்தில்
போர்க்களத்தின் இரத்தத்தில்
ஏழையின் கண்ணீரில்
குழந்தையின் புன்னகையில்
காதலின் சுகத்தில்
பிரிவின் வலியில்
எங்கே நின்று பேசினாலும்
அடிப்படையில் கவிதைகள்
அனைத்துமே அன்பையே யாசிக்கின்றன...
இனி வரும் மழையில்
நனைந்து பார்க்க
வானவில்லை ரசிக்க
இனி மலரப் போகும்
மலர்களில் மணம் கரைய
வாழ்வின் வலி தாங்க
இலையுதிர் காலக் கிளைகளின்

தளிருக்குக் காத்திருக்க
புயல்களை எதிர்பார்க்க
பூகம்பங்களை எதிர்கொள்ள
சக உயிர்களை நேசிக்க
சேகரித்த கண்ணீரை
அன்புக்கு மட்டுமே செலவழிக்க
கற்கத் தரும் கடமை
கவிதை மட்டுமே இருக்கிறது...
அந்தக் கவிதை மேல் ஒருகாதல்
அதுகாலமெல்லாம் வாழட்டும்...

கோ.தமிழ்ச்செல்வி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## பிரிந்து சென்ற தோழி

தோழியே!
நீ என்னுடன் இருக்கும்
வரை என்னுடைய
இன்ப துன்பங்களை
நான் உன்னிடமும்
நீ என்னிடமும்
பகிர்ந்து கொண்டோம்
திடீரென நீ என்னை விட்டுப்
பிரிந்து சென்றாய்
ஆனால் மறுபடியும்
இணைந்தோம்

ஒன்றாகப் பழகிய நாம்
இனி என்றும் பிரியாமல் இருப்போம்.

வ.பாரதி
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாம் ஆண்டு.

## சிரிப்புகள் பலவிதம்

இடம் பார்த்து சிரிப்பவன் - எத்தன்
குழைந்து சிரிப்பவன் - சந்தர்ப்பவாதி
இருக்குமிடமெல்லாம் சிரிப்பவன் - கோமாளி
கண் பார்த்து சிரிப்பவன் - காரியவாதி
கற்பனையில் சிரிப்பவன் - கவிஞன்
கோபத்தில் சிரிப்பவன் - சிந்தனையாளன்
மோகத்தில் சிரிப்பவன் - வெறியன்
கொடுக்கும் போது சிரிப்பவன் - சூழ்ச்சிக்காரன்
நீதியோடு சிரிப்பவன் - அறிஞன்
நிலை மறந்து சிரிப்பவன் - காதலன்
நின்று சிரிப்பவன் - நினைவுள்ளவன்
மகிமையில் சிரிப்பவன் - மன்னன்
மாண்பில் சிரிப்பவன் - பண்பாளன்
அருளுக்கு சிரிப்பவன் - ஆண்டி
கூட்டத்தில் சிரிப்பவன் - சாமானியன்

இ.கோகுலக் கண்ணன்
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாம் ஆண்டு.

## நெகிழியின் வாக்குமூலம்

எனக்கு உயிர் கொடுத்தார்கள்

எத்தனை எத்தனை வடிவங்களில்
எத்தனை எத்தனை நிறங்களில்
என்னால் அவர்களுக்கு வருமானம்தான்
மக்களுக்கும் நான் பயன்படுகிறேன்
இருப்பினும் பயன்பாட்டின் காலம்
குறைவு ஆனால்
என் அழிவின் காலமே இல்லையென்பதை
யார் எப்போது உணருவார்கள்
நான் காற்றில் பட்டமாக
நிலத்தில் எதிரியாக
நீரில் தடையாக
வான் மழைக்கு இடைஞ்சலாக
கால்நடைக்கு விஷமாக ஏன்
உருவாக்கியவனுக்கு சவாலாக
எங்கும் எனது ராஜ்யமாக
இருந்து கொண்டிருக்கிறேன்
நான் செய்யும் தீமைகளைப்
பார்க்கப் பார்க்க
எனக்கே அச்சமாகவும் கேவலமாகவும் இருக்கிறது
எனவே நானே சொல்கிறேன்
என்னை எப்படியேனும் அழித்து விடுங்கள்
முடியவில்லை என்றால்
என்னை உருவாக்காமல் விட்டு விடுங்கள்
இந்த வாழ்க்கை எனக்கு வேண்டாம்
பாவம் இந்த உலகம்
பிழைத்து விட்டுப் போகட்டும் என்று
வீதிகளில் இருக்கும் குப்பைத்

தொட்டிகளில் யாருக்கும் பயன்படாத
நெகிழி
புலம்பிக் கொண்டிருக்கிறது.

ப.அக்ஷயா
முதலாமாண்டு இளங்கலைத் தமிழ்

## வாழ்க்கை

கோடிக்கணக்கான கற்பனைகள்
லட்சக்கணக்கான முயற்சிகள்
ஆயிரக்கணக்கான தோல்விகள்
இருந்தாலும்
ஒரு சில நிஜங்களுடன்
நாம் வாழ்கின்ற இந்த நிகழ்வுக்கு
பெயர்தான் ‘வாழ்க்கை’.

சு.கோகுல் குமார்
இளங்கலைஆங்கிலம் முதலாமாண்டு

## மகளிர்

பெண்கள் இந்நாட்டின் கண்கள்
பிரிந்த உறவுகளை ஒன்றுசேர்க்கும்
தூண்கள் பெண்கள்;
இவ்வுலகில் பெண்கள் இல்லையெனில்
உலகம் சிறக்காது,
பெண் மென்மையானவள், பாசமுடையவள்:
மீன் போன்ற கண்களை உடையவள் பெண்
மலரைப் போன்றவள் பெண்

பெண்கள் சாதனையாளர்கள்
ஆண்களுக்கு நிகரானவள் பெண்
பெண்மையைப் போற்றுவோம்
மங்கையாய்ப் பிறப்பதற்கு நல்ல
மாதவம் செய்திட வேண்டும்.

வே.ராகவி
உயிர்த்தொழில் நுட்பவியல் 'ஆ' பிரிவு

## கவிதை

புலனத்தில் எழுதுவதல்ல!
புலம்பித் தீர்ப்பதல்ல!
உயிர் உள்ளம் கடல்
கடந்து பயணம்
செய்வது,
மூச்சிலும் திரிந்து
பேச்சையும் திறந்து
உணர்வில் எழுந்து
பிறப்பது!
உண்மையாய் வடிவெடுப்பது!
வரிவடிவாய் உருவெடுப்பது!
மெல்லியற்கையும் இதன்
பொருள் தான்!
பொங்கும் அகமும் இதன்
பொருள் தான்!
புரட்சி எழுப்புவதும்
இதன் களம் தான்!

ஒரு வரியோ
பல பக்கமோ!
உள்ளதைச் சொல்லி
உணர்ச்சியை ஈர்த்து
பதியவைப்பது கவிதை!

மு.வைரமணி
இளங்கலைத் தமிழ் மூன்றாண்டு

## ஆசிரியர்

பாசம் என்பது மூன்று எழுத்து
நேசம் என்பது மூன்று எழுத்து
கருணை என்பது மூன்று எழுத்து
அன்பு என்பது மூன்று எழுத்து
நட்பு என்பது மூன்று எழுத்து
அன்னை என்பது மூன்று எழுத்து
ஆனால் இவை அனைத்தையும்
ஐந்து எழுத்து உடைய
என் ஆசிரியர்களிடம் கண்டேன்!!!

கிருத்திகா.த
முதலாமாண்டு ஆங்கிலம்

## இயற்கை

பசுமை நிறத்தைப் பூசி
பழமையிலிருந்து புதுமை வரைக்கும்
பளபளக்கும் பச்சை நிறமோ!
உன் அழகு..........

பல ராகம் கேட்டாலும்
விடிந்தும் கேட்கும்
குயிலின் கூக்... கூ.... பாட்டு
பேரழகு......
சலசலக்கும் சத்தத்துடன் ஓடும்
ஆற்றின் அமிழ்த நீரில்
விளையாடிக் குளிப்பது ஓரழகு......
மஞ்சலும் செந்நிறமும் பூசி
காலையில் உதிக்கும் கதிரவனே!
மாலையில் கடலுக்குள்ளும்
இரு மலைகளுக்குள்ளும் ஒளிந்து
எதற்கு போகிறாயோ!

எங்கள் இரவை இன்னும் அழகாக்க
மல்லிகை நிறத்தில் வரும்
மெல்லிய பிறை நிலவே!
நீ முழுமையாக வானில் தோன்ற
அதைக் காட்டி என் அன்னை
அன்னம் ஊட்ட
ஆஹா!
அமுதமல்லவோ அன்னம்!!
ஏழு வண்ணங்களைக் கொண்ட
வானவில்லைக் காண
ஆசையாய் போவேன்.......
உனைக் காணவில்லை என்றால்
நான் தோற்றுப் போவேன்

இயற்கையே உன்னில்
எத்தனை அழகு!
அத்தனையும் காண எனக்கு
ஓர் ஆயுள் போதுமோ?
அடி அழகே நீயும் தாயல்லவோ
எனக்கு உன் அழகை வர்ணிக்க
மறு ஆயுள் கொடுப்பாயடி......

ம.ஹேமா
வணிகவியல் முதலாமாண்டு

## மழை

சிறு துளியாய்
இந்த மண்ணில் விழுந்து
நிலத்தைச் செழிக்க வைப்பாயோ!
கடவுளைக் காண
பக்தன் போவது போல
மரங்களைக் கண்டு
நீ வருவாயே!
அழகான இயற்கையை
பசுமையாக்க நீ வருவாய்......
நீ மண்ணில் விழுந்தவுடன்
மண் வாசனை உள்ளங்களைத் தாக்கும்
இடியுடன் கூடி நீ வரும்போது
எம் உள்ளம் நடுங்குகிறதே!
விவசாயிக்கெல்லாம் நீ தோழன்
உன்னைக் காற்று தள்ளிப் போனாலும்

நீ ஏதோ ஒரு இடத்தில் பெய்வாயே!
மழையே! உன் சாரல் என்னைத் தாக்க
என் உடல் சிலிர்க்கின்றதே!
குழந்தை சிரிப்பே
தோற்றுப்போகும்
நீ வரும் சத்தத்தில்........

த.யுவஷாலினி
வணிகவியல் முதலாமாண்டு

## இணையத் துளிகள் - குழந்தையின் கேள்வி

வேலைக்குப் போய் திரும்பி வந்த தன் அம்மாவிடம் 5 வயது சிறுமி கேட்டாள். நம்ம வீட்டு பீரோ சாவிய வேலைக்காரிகிட்ட ஏம்மா கொடுத்துட்டுப் போகல? அதைப் போய் வேலைக்காரிகிட்ட கொடுப்பாங்களா? நம்ம வீட்டு பீரோல இருக்கிற நகை, பணம் எல்லாம் வேலைக்காரிகிட்ட ஏம்மா கொடுத்துட்டுப் போகல? அதையெல்லாம் வேலைக்காரிகிட்ட கொடுக்கக்கூடாது.
உங்க ATM Card – ஐ வேலைக்காரிகிட்ட ஏம்மா கொடுத்துட்டுப் போகல? என்ன கேள்வி இது? நீ சொல்றதெல்லாம் ரொம்ப முக்கியமான பொருட்கள், அதையெல்லாம் வேலைக்காரிகிட்ட கொடுக்கக்கூடாது.

அப்போ ஏம்மா என்ன மட்டும் வேலைக்காரிகிட்ட விட்டுட்டுப் போறீங்க? அப்போ நான் உங்களுக்கு முக்கியம் இல்லையா?

இம்முறை அம்மாவிடமிருந்து பதில் இல்லை. கண்களில் கண்ணீர் மட்டுமே இருந்தது!

சீ.மோகனப்பிரியா

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## பொது அறிவு

1. இந்தியாவின் தேசிய மரம்?

   விடை: ஆலமரம்
2. சீனாவின் புனித விலங்கு?

   விடை: பன்றி
3. அதிக சினிமா தயாரிக்கும் நாடு?

   விடை: இந்தியா
4. இந்தியாவில் வருமான வரி கொண்டு வந்த ஆண்டு?

   விடை: 1860
5. மாணவர்களுக்கு இரண்டு கைகளாலும் எழுத பயிற்சி கொடுக்கும் நாடு?

   விடை: ஜப்பான்
6. மனித மூளையை எத்தனை எழும்புகள் பாதுகாக்கின்றன?

   விடை: 8
7. பேருந்து சேவை எங்கு எப்போது தொடங்கப்பட்டது?

   விடை: பிரான்ஸ் - 1891
8. தமிழ் நாட்டின் முதல் முதலமைச்சர்?

   விடை: குமாரசாமி
9. தமிழ்நாட்டின் முதல் பெண் முதலமைச்சர்?

   விடை: ஜானகி இராமச்சந்திரன்

10. இந்தியாவின் முதல் பிரதமர்?

விடை: ஜவஹர்லால் நேரு

11. இந்தியாவின் முதல் பெண் பிரதமர்?

விடை: இந்திரா காந்தி

12. இந்தியாவின் 11-வது குடியரசுத் தலைவர்?

விடை: ஏ.பி.ஜே.அப்துல்கலாம்

13. காகமே இல்லாத நாடு?

விடை: நியூசிலாந்து

14. தமிழ் நாட்டின் மிகப் பழமையான அணைக்கட்டு?

விடை: கல்லணை

15. மேட்டூர் அணையின் நீளம்?

விடை: 5300 அடி

மா.பிரபாகரன்

இளங்கலை ஆங்கிலம் முதலாமாண்டு

## *பொது அறிவு*

1.கடல் ஆழத்தைக் கண்டுபிடிக்க உதவும் சாதனத்தின் பெயர் என்ன ?

விடை : சோனார்

2.அதிக ஆயுள் கொண்டு வாழக்கூடிய மீன் எது ?

விடை : ஸ்டர்ஜியன் - 100 ஆண்டுகள்

3.எத்தனைவகையான எறும்புகள் உள்ளது ?

விடை : பத்தாயிரத்திரத்துக்கும் மேற்பட்ட எறும்புகள்

4.தேனீக்கு எத்தனை கண்கள் உள்ளன ?

விடை : நான்கு

5.எறும்பு எப்போது இறந்துவிடும் ?

விடை : அதன் மோப்ப சக்தியை இழந்தவுடன்

6.பூரானுக்கு எத்தனைக் கால்கள் உள்ளது ?

விடை : 100

7.பச்சைத்தங்கம் என்று அழைக்கப்படும் தாவரம் எது ?

விடை : யூக்களிப்படஸ்

8.உலகிலேயே ஆப்பிள் அதிகமாகப் பயிரிடும் நாடு எது ?

விடை : ரஷ்யா

9.மிகப்பெரிய இலைகள் உடைய தாவரம் எது ?

விடை : ரா.ஃ.பின் செடி

ப.நவீனா

இளங்கலை ஆங்கிம் முதலாமாண்டு

## *மரம் பற்றிய பொன்மொழிகள்*

**இயேசு நாதர்** - நல்ல மரங்கள், நல்ல கனியைக் கொடுக்கும் நல்ல மக்கள் நல்லதையே செய்வார்கள்

**பாரதியார்** - ஒரு மரத்தின் வேர் விழுதுகள் அந்த மரத்தினை தாங்குதல் போல பெற்றவர்களை அவர்களின் பிள்ளைகள் தாங்குதல் வேண்டும்

**ராஜாஜி** - இலைகளின்றி மரம் வளராது. அது போன்றே குழந்தைகளின்றி மனிதன் வளர முடியாது

**லத்தீன்** - ஒரு மரத்தினை மதிப்பிடுதல் அதன் இலைகளால் அல்ல அதன் கனிகளால் தான்.

**கண்ணதாசன்** - பழம் போல மனிதன் வாடுகிறான் என்பது பெருமையல்ல, மரம் போல் அவன் பயன்படுகிறான் என்பதே பெருமை.

**குருநானக்** - மரம் தனக்காகப் பழுப்பதில்லை. தனக்காக வாழ்வதில்லை. சான்றோர் தமக்காக வாழ்வதில்லை.

தேவராஜ்

இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## *கொடியின் தமிழ்ப் பெயர்கள்*

- குருகு
- காலாயுதம்
- குக்குடம்
- அதண்டை
- பைப்புள்
- வாரணம்

சோ.கோமதி

இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## *விடுகதைகள்*

வருவான் போவான். வருவது தெரியும். பார்க்கத்தான் முடியாது அவன் யார்?

விடை: காற்று

கைக்கு பூசினால் கல்யாண வீடு, உடம்புக்கு பூசினால் குளிர்ச்சி அது என்ன?

விடை: சந்தனம்

தண்ணீரில் பிறந்தவனை தண்ணீரிலேயே கரைத்தார்கள் அவன் யார்?

விடை: உப்பு

புள்ளிகளைச் சுமந்தபடி புல்வெளியில் நடமாட்டம் அவன் யார்?

விடை: மான்

இரண்டு கிணற்றுக்கு ஒரு பாலம் அது என்ன?

விடை: மூக்கு

ஊருக்கெல்லாம் ஒரே கல் அது என்ன?

விடை: உப்புக்கல்

உயிர் இல்லாப் பறவை ஊர் ஊராய்ப் பறக்குது அது என்ன?

விடை: கடிதம்

அது ஓர் அழகு தேவதை. ஆடி ஓடும் தேவதை. அது என்ன?

விடை: மயில்

எவ்வளவு தண்ணீர் குடித்தாலும் இவன் வயிறு நிரம்பாது அவன் யார்?

விடை: கடல்

மதில் இல்லாத கோட்டை; மக்கள் இல்லாத நாடு அது என்ன?

விடை: மனம்

மண்ணுக்குள்ளே கிடப்பான் மங்களகரமானவன் அவன் யார்?

விடை: மஞ்சள்

கொம்பு நிறைய கம்பு அது என்ன?

விடை: மாதுளம்பழம்

ஆடும் வரை ஆட்டம், ஆடிய பின் ஓட்டம் அது என்ன?

விடை:இதயம்

கடல் நீரில் வளர்ந்து மழை நீரில் மடிவது என்ன?

விடை: உப்பு

எங்க அக்கா சிவப்பு குளித்தால் கருப்பு அது என்ன?

விடை: அடுப்புக்கரி

இடி இடிக்கும் ; மின்னல் மின்னும் ; மழை பெய்யாது. அது என்ன?

விடை: பட்டாசு

உடல் சிவப்பு வாய் அகலம் உணவு காகிதம் நான் யார்?

விடை: அஞ்சல் பெட்டி

வி.ஈஸ்வர்
முதலாண்டு, கணினி பயன்பாட்டியல், 'அ' பிரிவு

## சிரிப்புத் துளிகள்

1.பஸ் ஏன் ஓடுது?

விடை: ஏனா அதால நடக்க முடியாது.

2.ஒரு ஊர்ல A to Z வரைக்கும் வார்டு இருந்தது அதுல ஒரு வார்டுல மட்டும் கொசு இல்ல ஏன் ?

விடை : ஏனா அது "E" வார்டு

3.ஒருத்தன் பட்டாசு வெடிச்சிட்டு தேம்பித்தேம்பி அழுதானாம் ஏன் ?

விடை : அது வெங்காய வெடியாம்

4.ஒருத்தன் சாப்பிடும் போது "bullet proof" போட்டுட்டே சாப்டானாம் ஏன் ?

விடை : அது சுடு சோறு அதான்

5.இரண்டு விமானம் எதிரேதிரே ரொம்ப வேகமா வந்து மோதிடிச்சு இப்போ என்னா ஆகும் ?

விடை : டமால்னு சத்தம் வரும்

6.ஒருத்தன் ரொம்ப நேரமா கூட்டிட்டே இருந்தான், ஆனா answer வரல ஏன்?

விடை : அவன் வீட்டக் கூட்டுனான்

7.ஒரு மந்தைல 20 ஆடு இருக்கும். மழை பெய்யுது. ஆனா அதுல ஒரு ஆடு மட்டும் நனயல ஏன் ?

விடை : அது குடை வச்சிருந்தது

8.பேனா NIP ஏன் கூர்மையா இருக்கு ?

விடை : ஏனா மொக்கையா இருந்தா எழுத முடியாதுல. அதுதான்

சோ.கோமதி
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

# கவிதைகள்

## மவுனம்

வார்த்தையில்லா மொழி
உணர்ச்சி மிகுந்த மொழி
உள்ளத்தின் மொழி
புத்தனின் புனித மொழி
சித்தனின் சிறந்த மொழி
வள்ளலார் வகுத்த மொழி
மனிதனுக்கு வேண்டிய மொழி
மழலைகள் அறியா மொழி
நூலகத்தின் நுழைவு மொழி
கருவறையில் தொடங்கிய மொழி
கல்லறையில் முடிகிறதே
மவுனமான அஞ்சலியாய்....

இரா.தீபா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## அன்பைப் பெற..

தாயை நேசித்து
அன்பைப் பெறலாம்
கடவுளை நேசித்து
மோட்சத்தைப் பெறலாம்
நண்பனை நேசித்து
நட்பைப் பெறலாம்
எதிரியை நேசித்து
அமைதியைப் பெறலாம்
ஆதரவற்றோரை நேசித்து
பாச உணர்வைப் பெறலாம்
குழந்தையை நேசித்து
குதூகலத்தைப் பெறலாம்
வாழ்க்கையை நேசித்து
வளம் பெறலாம்.

இரா.தீபா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு